## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 127/2018.

## வழக்கு சாட்சி – அ.சா. 8.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜா. | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கராஜ். | தொழில் | தனியால் நிறுவனத்தில் வேலை. |
| கிராமம் | பி.சி. பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 42/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.04.2025.

**(1–வது எதிரி இறந்துவிட்டார். 2–வது எதிரி ஆஜர். 3, 4, 5, 6 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக BNSS பிரிவு 355–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, பி.சி. பட்டியில் குடியிருந்து, தனியார் நிறுவனத்தில் கலெக்சன் பிரதிநிதியாக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2–வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 28.09.2017–ம் தேதி மதியம். 02.15 மணியைப்போல், கோடாங்கிபட்டி முளைப்பாரியம்ன் கோவில் தெருவில் வசிக்கும் எனது நண்பரான சந்திரகுமார் என்பவரை பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். அப்போது, சார்பு ஆய்வாளர் அங்கு நின்று வரைபடம் தயார் செய்துகொண்டிருந்தார். நான் என்னவென்று விசாரித்தபோது, அதரற்கு முன்னதாக அங்கு பிரச்சனை நடந்ததாகவும், அது சம்பந்தமாக வரைபடம் தயாரித்து, அதில் சாட்சியாக கையெழுத்துப் போடும்படி கேட்டுக்கொண்டதன்பேரில், நானும், என் நண்பர் சந்திரகுமார் என்பவரும்

கையெழுத்துச் செய்தோம். (அந்தப் பார்வை மகசர் மகசர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது) இது சம்பந்மாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் சம்பவயிடத்தில் வைத்துக் கையெழுத்துப் போட்டேன். நான் கையெழுத்துப்போடும்போது, நடந்த சம்பவம் பற்றித் தெரிவித்தார்கள். அ.சா.1 சென்றாயன் எனக்கு பழக்கம் இல்லை. அ.சா.5 சந்திரகுமார் எனக்குப் பழக்கம். அ.சா.5 வேண்டுதலின்படி நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.